

விருதுநகரில் தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி தென் மண்டல அளவிலான கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் சிறப்புரையாற்றினார். அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு தலைமை தாங்கினர். இந்த நிகழ்ச்சியில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணிஸ்ரீ குமார், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ் குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் சீனிவாசன், எஸ்.தங்கபாண்டியன் சிவகாசி, மாநகர மேயர் சங்கீதா இன்பம், நகர செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், செயற்குழு உறுப்பினர் சுப்பா ராஜா, மாநில துணைச் செயலாளர்கள் சுரேஷ், ஜே.மனோகரன் நம்பி, எஸ்.ஆர்.பார்த்திபன், பைந்தமிழ் பாரி, நிவேதா ஜெசிகா, எஸ்.கார்த்திக், ஏ.வி.ஆர்.மோகன்ராம், வே.கௌதமன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் வினோத் குமார், எஸ்.ஆர்.எஸ்.ஆர்.மாதவன், கார்த்திக், சுந்தரமூர்த்தி, ராஜ்குமார் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை விருதுநகர் தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ரமேஷ், வடக்கு மாவட்ட அமைப்பாளர் கே.ஜி.ராஜகுரு செய்தனர். இதில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் 24 மணி நேர மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தில் நேற்று (05.10.2024) மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஆய்வு மேற்கொண்டார். உடன் மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க.நந்தகுமார், பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் அனிஷ் சேகர், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மகாஜன் மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### பொதுமக்களின் புகார்கள் குறித்து நேரடி ஆய்வு !

# தடையில்லா மின்சாரம் கிடைத்திட நடவடிக்கை!

## ஆய்வுக்கூட்டத்தில் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி வலியுறுத்தல் !

சென்னை, அக்.6-

நேற்று (05.10.2024) சென்னை, தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் 24X7 இயங்கி வரும் மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தில் மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி மின்னகத்தில் பதிவான மின்சாரம் தொடர்பான பொது மக்களின் புகார்கள் மற்றும் அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து நேரடி ஆய்வு மேற்கொண்டார்.

மின்னகத்தில், பொதுமக்களிடமிருந்து புகார்களை பெறுவதற்காக, 3 முறைப் பணிகளில், ஒவ்வொரு முறைப்பணிக்கும் 2 மேற்பார்வையாளர்கள் உட்பட 65 பணியாளர்களை கொண்டும், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் கீழ் இயங்கி வரும் 44 மின் பகிர்மான வட்டங்களிலும் நாள் ஒன்றிற்கு நான்கு பேர் வீதம் 176 நபர்களை கொண்டும் 24x7 மணி நேரமும் இயங்கி வருகிறது.

மின்னகம் தொடங்கப்பட்டதிலிருந்து இதுவரை பெறப்பட்டுள்ள 28,69,876 புகார்களில் 28,64,215 புகார்கள் (99.80%) மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மின்னகத்தில், மின் தடை குறித்து பெறப்படும் ஒவ்வொரு புகாரும் உடனடியாக சரி செய்யப்பட்டு, புகார் குறித்த உண்மை தன்மை சம்பந்தப்பட்ட புகார்தாரரிடம் அலைபேசி மூலம் உறுதி செய்யப்பட்ட பின்னரே புகார்கள் முடிக்கப்படுகின்றன.

இந்த ஆய்வின் போது, தொடர்ச்சியாக மின்தடங்கல் ஏற்படும் இடங்களில் சிறப்பு கவனம் செலுத்தி அதற்கான காரணத்தை கண்டறிந்து உடனுக்குடன் சரி செய்யுமாறும், பொது மக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும், தடையில்லா, சீரான மின்சாரம் தொடர்ந்து கிடைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறும் அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மாநிலத்தின் மின்சாரத் தேவை மற்றும் மின் விநியோகத்தில் எவ்வித இடைவெளியும் இல்லை. மாநிலம் முழுவதும் தடையில்லா, சீரான மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்ள தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் எடுத்துள்ளது. மின் விநியோகம் சார்ந்த குறைபாடுகளை சரி செய்ய 24 மணி நேரமும் செயல்படும் தொலைபேசி சேவை மின்னகத்தை 9498794987ல் தொடர்பு கொள்ளுமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்த ஆய்வின் போது, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் கே.நந்தகுமார், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழக மேலாண்மை இயக்குநர் அனீஷ் சேகர், இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மஹாஜன், இயக்குநர்கள், மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## அரியானா சட்டப்பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு விறுவிறுப்பு!

சண்டிக்கார், அக்.6-

அரியானா சட்டப் பேரவை தேர்தலுக்கான வாக்குப்பதிவு விறு விறுப்பாக நடைபெற்றது. மதியம் ஒரு மணி நிலவரப்படி 38 சதவீத வாக்கு கள் பதிவானதாக தகவல் வெளியாகியுள்ளது.

மொத்தம் 90 இடங்களை கொண்ட அரியானா சட்டப்பேரவைக்கு ஒரே கட்ட மாக தேர்தல் நடைபெற்றது. காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு, மாலை 6 மணி வரை நடைபெற்றது. 20 ஆயிரத்து 629 வாக்குச்சாவடிகளில் பலத்த பாதுகாப்புடன் மக்கள் வரிசையில் நின்று வாக்களித்தனர். அரியானா முதலமைச்சர் நயாப் சிங் சைனி, எதிர்க் கட்சி தலைவர் பூபிந்தர் சிங் ஹூடா, ஜனநாயக ஜனதா கட்சி தலைவர் துஷ்யந்த் சவுதாலா, மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் வாக்களித்து ஜனநாயக கடமையாற்றினர். ஒன்றிய அமைச்சர் மனோகர் லால் கட்டார், ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற மனுபாக்கர் உள்ளிட்டோரும் வாக்கு செலுத்தினர். இத்தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் 8ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப் பட உள்ளது.

